Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 09 2023

வியாழக்கிழமை நவம்பர் 09, 2023 | ஒளி: 09 கதிர் 124 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை

### கொண்டுவர முடியும் என்கிறார் சுமந்திரன் எம்.பி



நாட்டின் பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர முடியுமென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி.யும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற வாதப் பிரதிவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கருத்துக்குப் பின்னர் எழுந்த எம்.பி.யான விமல் வீரவன்ச, பதவிக்காலம் முடிந்த பொலிஸ்மா அதிபருக்கு தொடர்ந்தும் பதவி நீடிப்பு வழங்கப்படுகின்றது. எனினும் இதற்கு அரசியலமைப்பு பேரவை அனுமதி வழங்கவில்லை. அதனால் பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்பு சட்ட ரீதியானது அல்ல. எனவே இது தொடர்பில் அரசு நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

### மத்திய மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு
## திங்கள் விடுமுறை




மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ்மொழிமூலமான சகல பாடசாலைகளுக்கும் திங்கட்கிழமை (13) விடுமுறை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, தீபாவளி பெருநாள் என்பதனால் விசேட விடுமுறை வழங்குமாறு மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே, மத்திய மாகாண கல்வியமைச்சின் செயலாளர் மேனக ஹேரத்துக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

13ஆம் திகதியன்று வழங்கப்படும் விசேட விடுமுறைக்கு, சனிக்கிழமை (18) பதிலீடு செய்யுமாறும் ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## கிரிக்கெட் பிரேரணை இன்று விவாதம்

இலங்கை கிரிகெட் சபையை உடனடியாக கலைத்து, கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளை இடைக்கால குழு முன்னெடுத்துச்செல்லும் எதிர்க்கட்சியின் பிரேரணை தொடர்பில் இன்று (09) வியாழக்கிழமை சபையில் விவாதம் நடத்தப்படவுள்ளது பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) விளையாட்டுத்துறை அமைச்சர் ரோஷான் ரணசிங்க இலங்கை கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகள் தொடர்பில் நீண்ட விளக்கம் ஒன்றை முன்வைத்ததைத் தொடர்ந்து, இலங்கை கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகளை இல்லாமலாக்குவதற்கு இலங்கை கிரிக்கெட் சபையை உடனடியாக கலைக்க வேண்டும் என தெரிவித்து முழு பாராளுமன்றமும் இணைந்து பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்ற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

தொடர்ச்சி P2

### கொழும்பு துறைமுக உட்கட்டமைப்புக்கு
## அரை பில்லியன் டொலர்கள் நிதி



இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் தெற்காசியப் பிராந்தியத்திற்கு முக்கியமான உட்கட்டமைப்பை வழங்கக் கூடிய ஒரு ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்யும் பணிக்கு உதவுவதற்காக அரை பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையினை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (DFC) அறிவித்தது.

தனது பங்காளரின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவி செய்யும், உள்ளூர் சமூகங்களின் முன்னேற்றத்தில் முதலீடு செய்யும் மற்றும் உள்ளூர் நிதி நிலைமைகளுக்கு மதிப்பளிக்கும் உயர்தர உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியளிப்பை மேற்கொள்வதில் DFC கொண்டுள்ள உறுதிப்பாட்டை இப்புதிய முனையம் பிரதிபலிக்கிறது.

தொடர்ச்சி P2

## நீர் கட்டணம் குறித்து தேசிய கொள்கை



நீர் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கையை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வெளியிடவுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) ஜே. வி. பி எம்.பியான. விஜித ஹேரத் நீர் கட்டணம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், 'வோட்டர் மார்க்கெட்' திட்டம் தொடர்பில் முன்வைக்கப்படும் கூற்றுக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை.

தொடர்ச்சி P2

## ஒவ்வொரு கிராமத்துக்கும் அஸ்வெசும அதிகாரி

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டுச் செல்ல பிரதேச செயலாளர்களின் சங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 'சூது' சம்மியா, ரொஷானா?



கிரிக்கெட் சபையினரின் பல ஊழல் மோசடிகளை சபையில் ஆதாரங்களுடன் அமபலப்படுத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, 'சூது' சம்மியா? அல்லது ரொஷான் ரணசிங்கவா தேவை என்பதை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும் எனக் கோரிநின்றார்.

தொடர்ச்சி P2

## பொலிஸ் மா அதிபர் யார்?



பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியினால் 3ஆவது தடவையாகவும் அதன் பின்னரும் அனுப்பப்பட்ட பரிந்துரைகள் எதுவும் அரசியலமைப்பு பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டு நியமிக்கப்படவில்லை என்றும் இது

தொடர்ச்சி P2

## "என்னை கலாநிதி என்று அழைக்கவும்"



"என்னை உரையாற்ற அழைக்கும் போது 'கலாநிதி' என்ற எனது கல்வித்தகுதி பட்டத்தை கூறியே அழைக்க வேண்டும். இதனை நான் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளேன்" என சபைக்கு தலைமைதாங்கிய எம்.பி.க்கு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் அறிவுறுத்தினார்.

தொடர்ச்சி P2

### நுவரெலியா தபால் நிலையத்தை விற்பதற்கு எதிர்த்து
## தபாலகங்கள் முடங்கின

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

அஞ்சல் தொலைத் தொடர்பு தொழிற் சங்கங்கள் நாடளாவிய ரீதியில் 48 மணி நேர வேலை நிறுத்தத்தை முன்னெடுத்திருந்தன.

ஆயினும், இந்த அறிவித்தல் திங்கள் மாலை வெளியானதும் நாடாளாவிய ரீதியில் அனைத்து தபாலகங்களும் வழமைபோன்று இயங்கும், ஊழியர்களின் விடுமுறைகள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை இரத்து செய்யப்பட்டுள்ளது என தபால் மா அதிபர் அறிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2





## பிரித்தானிய பிரஜை உயிரிழப்பு

ஹிக்கடுவ நாரிகம கடற்கரையில் நீராடச் சென்ற பிரித்தானிய பிரஜை ஒருவர் அலையில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டிற்கு விஜயம் செய்து ஹிக்கடுவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த 60 வயதுடைய பிரித்தானிய பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக ஹிக்கடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று நீராடச் சென்றபோது கடல் அலையில் சிக்கிய அவரை, கடற்கரையில் உள்ள உயிர்காக்கும் படையினர் கரைக்கு அழைத்துச் சென்று பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்தபோது, அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## "குழந்தைகளின் மயானமாகிறது காசா"

"காசா குழந்தைகளின் மயானமாகிறது. உடனடியாகப் போரை நிறுத்துங்கள்" என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல்- ஹமாஸ் போர் தொடங்கி ஒரு மாதத்தைக் கடந்துவிட்டது. 4,100 குழந்தைகள், 2,640 பெண்கள் உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காசாவில் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அந்தப் பிராந்தியமே குழந்தைகளின் மயானமாகிறது. உடனடியாகப் போரை நிறுத்துங்கள் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை

## கொண்டுவர முடியும் என்கிறார் சுமந்திரன் எம்.பி



இதனிடையே எழுந்து எழுந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி.யும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தின் அடிப்படையில் தற்போது நாட்டில் பொலிஸ்மா அதிபர் இல்லை. அரசியலமைப்பை வேண்டுமென்றே மீறி பதவி முடிந்த பொலிஸ்மா அதிபருக்குப் பதவி நீடிப்பை ஜனாதிபதி வழங்கி வருகின்றார்.எனவே அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டு வரமுடியும் என்றார்.

# கிரிக்கெட் பிரேரணை இன்று விவாதம்

குறித்த பிரேரணைக்கு எதிர்க்கட்சிகள் அனைவரும் ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனாலும் அரச தரப்பும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில், இது தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்வோம் என சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, சபை நடவடிக்கையை சுமார் ஒரு மணி நேரம் வரை இடை நிறுத்தப்பட்டு கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

அதில், எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி, இன்று (09) வியாழக்கிழமை இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பாக விவாதித்து, இலங்கை கிரிகெட் சபையை உடனடியாக கலைத்துவிடவும் இடைக்கால குழு கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லவும் பிரேரணை நிறைவேற்றி வாக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அரை பில்லியன் டொலர்கள் நிதி



இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு (இந்தியாவுடன் உட்பட) ஆகியவற்றை ஏற்படுத்துவதில் அமெரிக்கா கொண்டுள்ள நீடித்த அர்ப்பணிப்பை இம்முதலீடு மேலும் நிரூபிக்கிறது.

கொழும்பு துறைமுகத்திற்குள் அமைந்துள்ள ஆழ்கடல் மேற்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்திக்கு உதவி செய்வதற்காக *Colombo West International Terminal Private Limited* நிறுவனத்திற்கு வழங்கப்படும் 553 மில்லியன் டொலர் நிதியளிப்பினை ஆரம்பித்து வைப்பதற்காக DFCஇன் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) ஸ்கொட் நாதன் இலங்கைக்கு விஜயம் செய்தார். புதிய முனையத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி பணிக்குழுவின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் ஆகியோர் பிரதம நிறைவேற்று அதிகாரி நாதனுடன் இணைந்து கொண்டனர்.

# நீர் கட்டணம் குறித்து தேசிய கொள்கை



அந்த திட்டம் தொடர்பில் எந்தவித தீர்மானங்களும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

நீர் கட்டணம் மற்றும் நீர் விநியோகம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் ஆளும் கட்சியினரால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் அல்ல. எவ்வாறெனினும், வீட்டு நீர் வழங்கல் பிரிவு தொடர்பிலேயே நாம் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். அத்துடன், விவசாயத்திற்கான நீரை முகாமைத்துவம் செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

எதிர்காலத்தில் நீர் பாவனையை சிக்கனப்படுத்துவது தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

அது தொடர்பிலேயே தற்போது பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நீர் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வெளியிடப்படும் என்றார்.

# ‘சூது’ சம்மியா, ரொஷானா?

ஊழல் மிக்க கிரிக்கெட் சபைக்கு அடிபணிவதா அல்லது கிரிக்கெட் சபையைத் தூய்மைப்படுத்துவதா என்பதை எம்.பிக்களும் தீர்மானிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கிரிக்கெட் சபை மோசடி மற்றும் இடைக்கால குழு நியமனம் தொடர்பில் விசேட கூற்றைப் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி குசானி சரோஜனி தலைமையில் ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. இந்த குழு சமர்ப்பித்த அறிக்கையைக் கொண்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்குமாறு சட்டமா அதிபர் உட்பட சகல தரப்பினருக்கு வலியுறுத்தியுள்ளேன்.

கிரிக்கெட் சபை மீது நாட்டு மக்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.மக்கள் போராட்டத்தைத் தடுப்பதற்காக இடைக்கால குழுவை நியமித்தேன்.ஜனாதிபதியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.ஊழல் மோசடியாளர்கள் ஜனாதிபதியை ஆக்கிரமித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். கிரிக்கெட் தொடர்பில் அவருக்குத் தவறான விடயங்களைக் கூறுகின்றார்கள் . ஜனாதிபதியை யாரோ அழிக்க முயற்சிக்கின்றனர் என்பது தனக்கு நன்றாகத் தெரிகின்றது. கிரிக்கெட் நிறுவனத்தில் இருக்கும் ஊழல், மோசக்காரர்களை ஜனாதிபதியிடம் நெருங்குவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி காரியாலயத்துக்குள்ளும் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.



நாட்டின் அமைச்சரை அச்சுறுத்தும் வகையில், திருடர் கும்பல் சக்தி வாய்ந்தது. ஐ.பி.எல் போட்டியை ஜனாதிபதி கண்டு களித்துக்கொண்டிருந்த போது, அவருக்குப் பின்னால் கிரிக்கெட்டி நிறுவனத்தின் ஷம்மித் சில்வாவின் பாதுகாவலர்கள் நின்றிருந்தனர். அவர்கள் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்றும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.



# “என்னை கலாநிதி என்று அழைக்கவும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) நீதிமன்றம். நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்பின்போதே அவர் இவ்வாறு அறிவுறுத்தினார்.

இந்த விவாத்தில் முக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான ஹேசான் விதானகே உரையாற்றி பின்னர் சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த அரச தரப்பு எம்.பி.யான சமன் பிரிய ஹேரத், ‘அடுத்ததாக உரையாற்ற கௌரவ சுரேன் ராகவனை அழைக்கின்றேன்” என்றார்.

இதனையடுத்து, எழுந்த உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், “என்னை உரையாற்ற அழைக்கும் போது ‘கலாநிதி’ சுரேன் ராகவன் என்றே அழைக்க வேண்டும். இதனை இந்த சபையில் சபாபீடத்துக்கு தலைமை தாங்கும் பலருக்கும் பல தடவைகள் கூறியுள்ளேன்.

நான் பல்கலைக்கழகம் சென்று கஷ்டப்பட்டு படித்து பெற்ற பட்டம் கலாநிதி. எனவே எப்போது என்னை அழைத்தாலும் ‘கலாநிதி’ என்ற பட்டத்தை எனது பெயருடன் சேர்த்து பயன் படுத்த வேண்டும்” என்று அறிவுறுத்தினார்.

# ஒவ்வொரு கிராமத்துக்கும் அஸ்வெசும அதிகாரி

இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கத்துடன் ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (07) நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறியுள்ளார்.

அதேபோல், அஸ்வெசும வேலைத்திட்டத்தைச் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் ஒவ்வொரு பிரதேசங்களுக்குமான அதிகாரிகளை நியமிப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படக்கூடிய, வறுமையான மற்றும் மிக வறுமையான குடும்பங்கள் என்ற 04 கட்டங்களின் கீழ் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வழங்கப்படுவதோடு, அங்கவீனமான, முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கும் வழமை போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# தபாலகங்கள் முடங்கின

ஆயினும், அஞ்சல் தொலைத் தொடர்பு தொழிற் சங்கங்கள் அனைத்து தபாலகங்களின் முன்னாலும் நவம்பர் 08ஆம், 09ஆம் திகதிகளில் அஞ்சலகங்கள் இயங்காது என அறிவித்திருந்தபடியே செவ்வாயன்று (08) பல தபாலகங்கள் இயங்கவில்லை.

ஒவ்வொரு அஞ்சலகங்கள் முன்னாலும் பூட்டப்பட்ட வாயிற் கதவடியில் “தொழிற் சங்க நடவடிக்கை காரணமாக 8 மற்றும் 9 ஆகிய இரு தினங்களிலும் அஞ்சல் அலுவலகம் இயங்காது பூட்டப்பட்டிருக்கும்” என எழுதப்பட்ட அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் திங்கள் நள்ளிரவு (07) முதல் தபால் ஊழியர்கள் பணிபகிஷ்கரிப்பை முன்னெடுத்து வரும் நிலையில், செவ்வாயன்று (08) தபால் நிலைய ஊழியர்களும் ஆதரவு வழங்கும் வகையில் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். நுவரெலியாவிற்கும் முழு இலங்கைக்கும் தபால் சேவையின் அடையாளச் சின்னமாகக் கடந்த 130 வருடங்களுக்கு மேலாகத் திகழும் நுவரெலியா தபால் நிலையத்தை விற்பதற்கு எதிராக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா தபால் நிலையம் ஆங்கிலேயர்களின் பாரம்பரிய தொழில்நுட்ப திறமைகளைக் கொண்டு சிவப்பு செங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இங்கிலாந்தின் *SAINSBURY WACTHAMSTO* நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட சுமார் 40 அடி உயரம் கொண்ட அழகிய கடிகாரம், பித்தளை மற்றும் உருக்கினால் அமைக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கட்டிட மூலப்பொருட்களைக் கொண்டே இந்த அழகிய கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. கட்டிட நிர்மாணத்திற்கு பெரும்பாலும் தேக்கு மரங்களே உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் புராதன வரலாற்றைப் பிரதிபலிக்கும் விலைமதிப்பற்ற வளமாக நுவரெலியா தபால் நிலையக் கட்டிடம் கருதப்படுகின்றது. இந்தக் கட்டிடத் தொகுதியை இலங்கையின் முதன்மை சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதை அடுத்தே அஞ்சல் தொழில் சங்கத்தினர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நவம்பர் 8 ஆம் திகதி மாலை வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல தெரிவித்துள்ளார்.




# பொலிஸ் மா அதிபர் யார்?

அரசியலமைப்பு பேரவையின் சக உறுப்பினர்களுக்கும் தெரியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) தெரிவித்துள்ளார்.

மேலும், பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக 2 சந்தர்ப்பங்களில் தலா 3 மாதங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும், இரண்டாவது நியமனம் வழங்கப்படும் போது, அடுத்த நியமனம் நிரந்தர நியமனமாக இருக்க வேண்டும் என அரசியலமைப்பு பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அத்துடன், பொலிஸ் மா அதிபரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்றாலும், அதனை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க அரசியலமைப்பு பேரவைக்கும் அதிகாரம் உள்ளதாகவும், அரசியலமைப்பின் ஏற்பாட்டு விதிகளை வியாக்கியானம் செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் சஜித் தெரிவித்துள்ளார்.



# “குழந்தைகளின் மயானமாகிறது காசா”

இஸ்ரேல் தரைவழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த காசாவையும் சுற்றிவளைத்து விட்டதாகவும் வடக்கு, தெற்கு என்றில்லாமல் காசாவை இரண்டாகப் பிரித்துத் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தது. இஸ்ரேல் தரப்பில் இதுவரை 1,400 பேர் பலியாகியுள்ளனர். 200க்கும் மேற்பட்டோர் பிணைக் கைதிகளாக ஹமாஸ் வசம் உள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தம் செய்ய சர்வதேச அமைப்புகள், உலக நாடுகள் பலவும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் சூழலில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் நிறுத்தம் தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ளார். அதில் அவர், “மனிதாபிமான உதவிகள் காசாவுக்குள் சென்று சேர்வதை உறுதி செய்யவும், பிணைக் கைதிகள் பாதுகாப்பாக வெளியேற வழிவகுக்கவும் காசாவில் அவ்வப்போது சரியாகத் திட்டமிட்டு சற்றே லாவகமாகத் தாக்குதலை நிறுத்துவது பற்றி பரிசீலிப்போம்.

ஆனால், ஏற்கெனவே கூறியபடி போர் நிறுத்தம் என்பதற்கு வாய்ப்பில்லை. போர் முடிந்த பின்னர் காசாவை முழுக் கட்டுப்பாட்டுக்குள் சில காலம் எடுத்துப் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொறுப்பு இருக்கிறது” என்றார்.





## பஸ் விபத்தில் 13 பேர் காயம்

மாபலகமவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று நாகொட- கலஸ்ஸ பிரதேசத்தில் முச்சக்கரவண்டியுடன் மோதி புதன்கிழமை (08) விபத்துக்குள்ளாகியுள்ளது.

முச்சக்கரவண்டியை திடீரென தெற்கு நோக்கித் திருப்ப முற்பட்டபோது, பஸ் வீதியை விட்டு விலகி கல்வெட்டில் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

விபத்தில் சுமார் 13 பேர் காயமடைந்து நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2,763 கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு

# டிசெம்பரில் பரீட்சை

நாட்டில் ஏற்பட்டுள்ள 2,763 கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படுமென பிரதமரும் மாகாண, மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரதமரிடத்திலான கேள்வி நேரம் புதன்கிழமை (08) இடம்பெற்றுள்ளது. இதன்போது சஞ்சீவ எதிரிமான எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் 14,022 கிராம சேவகர் காரியாலயங்கள் உள்ளன. இதில் 2,763 கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வெற்றிடங்களை நிரப்பும் வகையில், 28.05.2023 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில், இலங்கைப் பரீட்சை திணைக்களம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சையை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்களுக்காக தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில், வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சை திணைக்களம் தமது விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு 2023 டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் பரீட்சையை நடத்தவுள்ளது.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளது. அதன்படி நேர்முகப்பரீட்சை மூலம் கிராம சேவகர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றார்.



## குளவி கொட்டில் 8 மாணவர்கள் பாதிப்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேசத்தில் புதன்கிழமை (08) குளவி கொட்டுக்கு இலக்கான 8 பாடசாலை மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுணதீவு - கன்னங்குடா மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் வீதியில் செல்லும்போது, குறிஞ்சாமுனை பகுதியில் வீதிக்கு அருகிலுள்ள பனைமரத்தில் கூடுகட்டியுள்ள குளவிகள் மாணவர்களை தாக்கியுள்ளது. இதில் 8 மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், தாண்டியடி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்த குளவி கூடு கட்டியுள்ள பனைமரங்களில் இருந்து கூடுகளை அகற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## மாணவனை தாக்கிய ஆசிரியை கைது

■ எஸ்.சதீஸ்

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில், நான்காம் தரத்தில் கல்விப் பயிலும் ஒன்பது வயதான மாணவன் ஒருவனை, தடியால் தாக்கிய ஆசிரியை, புதன்கிழமை (08) காலை 10.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவன், பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

திங்கட்கிழமை (06) ஆங்கில பாடம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, இரு மாணவர்கள் கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போதே மேற்படி மாணவன் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தாக்குதலுக்கு உள்ளான மாணவனின் வலது கை மற்றும் உடம்பின் பின் பகுதியில் பிரம்பால் அடித்தமைக்கான அடையாளங்கள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில், கல்வி அமைச்சு, மத்திய மாகாண ஆளுநர், மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளர், ஹட்டன் வலய கல்விப் பணிமனைக்கு சிறுவனின் பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## வேலை நிறுத்தப் போராட்டம்

■ மு.தமிழ்ச்செல்வன் , தீஷான் அஹமட்

நாடளாவிய ரீதியில் செவ்வாய்க்கிழமை (07) நள்ளிரவு முதல் தபால் ஊழியர்கள் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் 48 மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வேலைநிறுத்தமானது, கண்டி மற்றும் நுவரெலியா தபால் நிலையங்கள் அமைந்துள்ள கட்டிடங்களை விற்பனை செய்யும் தீர்மானத்திற்கு எதிராகவே முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மின் தாக்கி இளம் பெண் பலி

■ ரஸீன் ரஸ்மின்

மதுரங்குளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரெட்பானா - புழுதிவயல் பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை (07) பதிவாகியுள்ளது.

பாலாவி - புழுதிவயல், ரெட்பானா பகுதியைச் சேர்ந்த குப்பை மரிக்கார் பாத்திமா சாபிகுனா (வயது 38) எனும் ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டில் மின்சார தேவைக்காக மின் வயரை எடுத்துக் கையாளுகையிலேயே இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு மின்சாரம் தாக்குதலுக்கு உள்ளான குறித்த இளம் பெண்ணை, அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கைக்கான புதிய தூதுவர்களுடன் செந்தில் சந்திப்பு



இலங்கைக்கான புதிய தூதுவர்களாக பொறுப்பேற்றுக்கொண்ட இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், எகிப்து, இத்தாலி, கியூபா, பங்களாதேஷ், பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர்கள் மற்றும் பதவி நிலைகளுக்கான பணிப்பாளர்கள் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை செவ்வாய்க்கிழமை (07) சந்தித்துள்ளனர்.

இக்கலந்துரையாடலில், சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், கைத்தொழில் பேட்டை ஸ்தாபிப்பு, கனிமத் துறைகளின் அபிவிருத்தி, கூட்டு முயற்சி விவசாய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி போன்ற துறைகளை அவர்கள் நியமிக்கப்பட உள்ள நாடுகளுடன் இணைந்து முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## யாழில் மாபெரும் போதை விருந்து

■ எஸ்.நிதர்ஷன்

யாழ்.நகர் பகுதியில் அமைந்துள்ள ரில்கோ ஹோட்டலில் கடந்த 4ஆம் திகதி இரவு "DJ night" எனும் பெயரில் போதை விருந்து கொண்டாட்டம் ஒன்று இடம்பெற்ற விடயம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த விருந்துக்கு கொழும்பைச் சேர்ந்த Eventsby ShuttleVibe எனும் நிறுவனத்தின் பெயரில் சிலர், சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைப்பு விடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன் அடிப்படையில், அன்றைய தினம் அங்கு வந்த சிலர் தாம் கொண்டு வந்திருந்த கஞ்சா, ஐஸ் போன்ற போதைப்பொருளையும் நுகர தொடங்கியுள்ளனர்.

ஹோட்டலில் மதுபானம் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும், ஆனாலும், அங்கு வந்த பலரும் தம் வசம் உயிர்க்கொல்லி போதைப்பொருளை வைத்திருந்ததாகவும் விருந்தில் கலந்து கொண்ட சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தென்பகுதிகளில் சமூக வலைத்தளங்கள் ஊடாக இவ்வாறான போதை விருந்துக்கு அழைப்பு விடுப்பவர்களுக்கு எதிராகவும், விருந்து கலந்து கொண்டவர்களுக்கு எதிராகவும் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## கத்திக்குத்துக்கு உள்ளாகி கடற்படை வீரர் உயிரிழப்பு

■ அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை கடற்படை முகாமுக்குள் கடற்படை வீரரொருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ள சம்பவமொன்று புதன்கிழமை (08) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாவிக நெவி பண்டார என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் மற்றைய விபரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் துறைமுக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மலையகத்தில் பரவும் நோய் தொடர்பில் எச்சரிக்கை

■ இரா.யோகேசன்

மலையகத்தில் மிக வேகமாகக் கண் நோய் பரவி வருகின்றது.

குறிப்பாக பாடசாலைகளை, சிறுவர் முன்பள்ளிகளுடாகவே . இந்நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது.

இந்நோய் கண்களை பார்ப்பதினூடகவே பரவுகின்றது என்ற கருத்து சமூக மட்டத்தில் நிலவினாலும், வைத்தியர்களின் ஆலோசனைப் படி அவ்வாறில்லை என தெரிவிக்கின்றனர்.

கண்களில் இருந்து வருகின்ற நீர் ஏதோ ஒருவகையில் மற்றவரின் கண்களுக்குள் செல்வதினாலே பரவுவதாகக் கூறுகின்றனர். எனவே, கண் நோய்களுக்குப்பட்டவர்கள் வீட்டில் நோயுற்றவர்கள் பாவிக்கும் பொருட்களை விடயத்தில் ஏனையோர் அவதானத்துடன் செயல்படுவதோடு கண்களை தொடுவதற்கு முன் கைகளை சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும்.

அத்துடன், நோய் தாக்கத்திற்குட்பட்டோர் வைத்திய ஆலோசனை பெறுவதோடு அவர்களும் சுத்தமாக இருப்பதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றது.

## தீப்பற்றி எரிந்த கடைகள் முற்றாக நாசம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி தெற்கு எல்லையிலுள்ள ஆரையம்பதியில் வர்த்தக நிலையங்கள் மீது தீப் பரவியதில் புடவைக் கடை உட்பட மூன்று கடைகள் மற்றும் வாகனங்கள் கழுவும் சேர்விஸ் கராஜ் என்பன எரிந்து நாசமாகியுள்ளதுடன், வாகனங்களும் எரிந்து முற்றாக சாம்பலாகியுள்ளன.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை (09) இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் தீ அணைக்கும் படையினர் இராணுவத்தினர் பொது மக்கள் இணைந்து தீயை அணைத்த போதிலும் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

தீபரவலுக்கான காரணம் கண்டறியப் படாத நிலையில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்**

இல.21, ஐகோனிக் ரெசிடென்சீஸ், இல. 110, பார்லிமென்ட் ரோட், ராஜகிரிய இல் தனது பதிவு அலுவலகத்தை கொண்டுள்ள COLOMBO INTERNATIONAL AIRPORT HOTELS (PRIVATE) LIMITED - தமது அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்தை பதினைந்து கோடி தொண்ணூற்று ஒன்பது லட்சத்து தொண்ணூராயிரம் ரூபாய் (159,990,000) இதிலிருந்து மூன்று கோடியே பத்தொன்பது லட்சத்து தொன்னூற்று எட்டாயிரம் ரூபவாக (31,998,000) குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக 2007ம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59 பிரிவு விதிகளின்படி இத்தால் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**நிருவாக சபையின் உத்தரவு**
**கார்ப்பரேட் டி சொலுடியோ (பிவீஎ) எல்டீடி**
**கம்பனி செயலாளர்**

# அநாமதேய அலைபேசி அழைப்புகள் கிடைத்தால் விழிப்பாக இருக்கவும்

பல்வேறான கனவுகளுடன் முதுகுகளில் பெரும் சுமையைத் தூக்கிக்கொண்டு பாடசாலைகளுக்குச் செல்லும் இலட்சக்கணக்கான மாணவர்களில் குறிப்பிட்ட சிலரே, தடைத்தாண்ட பரீட்சைகளில் சித்தியெய்தி, சிறந்ததொரு இடத்துக்குச் செல்கின்றனர். அதில், அரைவாசிக்கு மேற்பட்டோர் ஏனைய தொழில் துறைகளில் மிளிர்கின்றனர். இன்னும் சிலர், 11 ஆண்டுகள் கல்வி பயின்றமைக்கான எந்தவிதமான பிரயோசனங்களையும் பெறாது. வீட்டுக்கு மட்டுமன்றி, சமூகத்துக்கும் சுமையாகிவிடுகின்றனர்.

சிறந்த தொழில் கிடைக்காதவர்கள் வெளிநாடுகளுக்கு ஏதாவது ஒரு தொழிலைத்தேடிச் சென்றுவிடுகின்றனர். இன்னும் சிலர் சொந்த கால்களில் நிற்பதற்கு முயல்கின்றனர். அதில், பலரும் வெற்றிபெற்று விடுகின்றனர். அவ்வாறானவர்கள் தங்களுடைய பிள்ளைகளாவது, உயர்கல்வியைக் கற்று நல்லதொரு நிலைக்கு வரவேண்டுமென இரவு பகல் பராது உழைக்கின்றனர். உழைக்கும் பாதியை, தங்களுடைய பிள்ளைகளின் கல்விக்காகவே செலவழிக்கின்றனர்.

நமது நாட்டை பொறுத்தவரையில், கல்வி கற்றவர்களும், உயர் தொழில்களில் இருப்போரும், தங்களுக்குப் போதியளவில் வருமானம் கிடைக்கவில்லை என்பதைக் காரணம் காண்பித்து வெளிநாடுகளுக்கு பறந்துவிடுகின்றனர். நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் பின்னர், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வரி விதிப்புகளை தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், குடும்பத்துடனும் புலம்பெயர்ந்து விடுகின்றனர். இதற்கிடையில், தங்களுடைய பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பும் பெற்றோர்களில் பலர், பிள்ளைகள் வீடு திரும்பும் வரையிலும் கண்களில் விளக்கெண்ணெய்யைக் ஊற்றிக்கொண்டு, வழிமேல் விழிவைத்துக் காத்துக்கொண்டிருக்கின்றனர். ஏனெனில், அந்தளவுக்கு சமூக சீரழிவுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏமாற்றும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்களின் அலைபேசி இலக்கங்களை எவ்வாறோ பெற்றுக்கொள்ளும் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் கும்பல், பெற்றோருக்கு அழைப்பை ஏற்படுத்தி, “உங்களுடைய பிள்ளை ஓர் அனர்த்தத்தில் சிக்கிவிட்டது. நீங்கள் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. நாங்கள், வைத்தியசாலைக்கு அருகில்தான் இருக்கின்றோம். அப்பிள்ளைக்கு தலையில் அடிப்பட்டு விட்டது. அதற்காக, சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டும். ஆகவே, பணத்தை கொஞ்சம் வைப்பிலிடுங்கள் என கூறியிருக்கின்றனர்”

அவ்வாறுதான் தாயொருவரின் அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியவர்கள், மேலே குறிப்பிட்டதைப் போலவே கூறியிருக்கின்றனர். எனினும், அன்றையதினம், அவருடைய பிள்ளைக்கு பாடசாலைக்குச் செல்லவில்லை. இதனால் சற்று விழிப்படைந்த அந்த தாய், தன்னுடைய மகளின் வகுப்பாசிரியரிடம் தொடர்பு கொண்டு விபரங்களை கேட்டறிவதாக பதிலளித்துள்ளார். இதனிடையே அழைப்பை ஏற்படுத்திய அலைபேசி முடக்கப்பட்டுவிட்டது.

இவ்வாறு ஏமாற்றுபவர்கள் இருக்கின்றனர் என்பதை தெளிவூட்டும் வகையில், ஒலிப்பதிவொன்றை அத்தாய் சமூக வலைத்தளங்களில் தரவேற்றியுள்ளார். ஆகையால், தங்களுடைய பிள்ளைகள் தொடர்பில் ஏதாவது ஆபத்தான தகவல்களை கூறும், அநாமதேய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக வரும் அழைப்புகள் தொடர்பில் பெற்றோர்கள் அவதானமாக இருப்பதே சிறந்தது.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்துவிடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சில சமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும். தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புதுஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நல்லூர் முருகன் கோவிலுக்கு மோடி போகாதது ஏன்?

இலங்கைக்கு 2015ஆம் ஆண்டு இந்திய பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டபோது புகழ்பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் கோவிலுக்கு சென்று வழிபாடு நடத்தாதது ஏன் என்பது தொடர்பாக இலங்கைக்காக இந்தியாவின் முன்னாள் துணைத் தூதர் நடராஜன் இதுவரை வெளியாகாத தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்தியத் துணை தூதராக 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர் ஏ.நடராஜன். *From the Village to the Global Stage* என்ற தலைப்பில் புதிய புத்தகம் ஒன்றை ஏ.நடராஜன் எழுதி உள்ளார்.

இந்தப் புத்தகம் விரைவில் கோவையில் வெளியிடப்பட உள்ளது. இந்தப் புத்தகத்தில் பிரதமர் மோடியின் யாழ்ப்பாண பயணம் தொடர்பான பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன.


அந்தப் புத்தகத்தில் ஏ.நடராஜன் எழுதியிருப்பதாவது,

பிரதமர் மோடியின் யாழ்ப்பாணம் பயணத்தின் போது நல்லூர் கோவில் அல்லது மாவிட்டாபுரம் கந்தசாமி கோவில் அல்லது காங்கேசன்துறை நகுலேஸ்வரன் கோவிலுக்கு அழைத்து செல்ல திட்டமிடப்பட்டது.

இது தொடர்பாக நல்லூர் கோவில் தேவஸ்தான நிர்வாக அதிகாரி குமாரதாச மாப்பன முதலியாருடன் ஆலோசனையும் நடத்தப்பட்டது. அப்போது, கோவிலுக்குள் மேலாடை அணியாமல்தான் செல்ல வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில்தான் கோவில் நடை திறக்கப்படும் என்கிற மரபுகளில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என நல்லூர் தேவஸ்தான அதிகாரி திட்டவட்டமாகக் கூறிவிட்டாராம். இதனால் நல்லூர் முருகன் கோவிலுக்குப் பிரதமர் மோடியால் செல்ல முடியவில்லை.

ஆனால், காங்கேசன்துறை நகுலேஸ்வரன் கோவிலுக்கு சென்று பிரதமர் மோடி வழிபாடு நடத்தினார். அப்போது 98 வயதான நகுலேஸ் குருக்கள் உடனிருந்தார். தற்போது அவர் காலமாகிவிட்டார். இவ்வாறு ஏ.நடராஜன் பதிவிட்டுள்ளார்.

பிரதமர் மோடி இலங்கைக்கு 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13,14ஆம் திகதிகளில் பயணம் மேற்கொண்டார்.





அரசு முறை பயணமாக 27 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கை பயணம் மேற்கொண்ட முதல் இந்திய பிரதமர் மோடி. 1987ஆம் ஆண்டு இந்தியா- இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட இலங்கை சென்றார் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி. அந்த பயணத்தின் போது இலங்கை கடற்படை வீரர் ஒருவரால் ராஜீவ் காந்தி தாக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்தது. 2008இல் சார்க் மாநாட்டில் பங்கேற்க அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங் சென்றிருந்தார். ஆனால், அது இலங்கைக்கான தனிப்பட்ட அரசு முறை பயணம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் காந்திக்குப்பிறகான காலகட்டத்தில் இந்தியப் பிரதமர்கள் சிலர் இலங்கைக்கு சென்றிருந்தாலும் இலங்கைக்கான தனிப்பட்ட அரசுமுறைப்பயணமாக அவை அமைந்திருக்கவில்லை. மாறாக, இலங்கையில் நடந்த சர்வதேச மாநாடுகளில் கலந்துகொள்வதற்கான பயணங்களாகவே அவை அமைந்திருந்தன.

2008ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்துகொண்டு சார்க் அமைப்பின் தலைமைப்பொறுப்பை அப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கையளித்தார். அதேசமயம் 2013ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த காமன்வெல்த் மாநாட்டில் அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளவில்லை.

இந்தியா இலங்கைக்கு இடையிலான அணுசக்தி ஒத்துழைப்பு உள்ளிட்ட பல ஒப்பந்தங்களும் அப்போது கையெழுத்திடப்பட்டன.

மேலும் இந்திய பிரதமர் நரேந்திரமோடியை இலங்கைக்கு வரும்படி மைத்ரிபால சிறிசேன அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதாக இந்திய தரப்பிலும் அப்போதே தெரிவிக்கப்பட்டிருந்த பின்னணியில் மோடியின் இலங்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது.


இலங்கைக்காக இந்தியாவின் முன்னாள் துணைத் தூதர் நடராஜன்

## கடிதங்கள்

### பிரதேச மக்கள் கவலை

திருக்கோவில் செயலகப் பிரிவிற்குட்பட்ட தம்பிலுவில் மற்றும் திருக்கோவில் ஆகிய பிரதேசங்களில் அண்மைக்காலமாக நிகழ்ந்து வரும் கடலரிப்பின் காரணமாக பல்வேறான பாதிப்புக்கள் இடம்பெற்று வருவதுடன், பெரும் நிலப்பரப்பு கடலரிப்புக்கு உள்ளாகி வருவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிப்படைந்து, கரையோரப் போக்குவரத்து வீதிகள், தென்னந் தோப்புக்கள், மீனவ வாடிகள் போன்றன அழிவடைந்து வருவதுடன், படகு முதலான கடற்றொழில் உபகரணங்களும் சேதமைடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த கடலரிப்பு காரணமாக, தம்பிலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் சேதமடைந்துள்ளது.

சுமார் 200க்கும் அதிகமான தென்னை மரங்கள் மற்றும் பயன்தரும் பல்வகை மரம் செடி கொடிகளும் அழிவடைந்துள்ளது.

எனவே இப்பகுதியில் நிகழ்ந்து வரும் கடலரிப்பினைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொண்டு மக்கள் நலனில் அக்கறை கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மாத்தளையில் நூல்கள் வெளியீடு




பிரபல சிங்கள எழுத்தாளரும் கவிஞரும் மத்திய மாகாண விருதுகள் பெற்றவருமான மாத்தளை மாவட்டச்செயலக தகவல்துறை உயர் அதிகாரியுமான காமினி நிஸாந்த கருணாரத்னவின் ‘அமல் பிஸோ’, ‘குருலு பாலுவ’ இரண்டு சிறுவர் நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் மாத்தளை மாவட்ட செயலக வீரகெப்படிபொல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான மாத்தளை மலரன்பன் தமிழாக்கம் செய்து கலைஒளி முத்தையா பிள்ளை நினைவு குழு வெளியிட்டுள்ள ‘கொலுஷூ’ பிறமொழிச் சிறுகதைகள் நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

சாலிய குணவர்த்தனவால் ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்த்த 10 கதைகளையும், சிங்கள எழுத்தாளர்களான ஜி.பி.சேனாநாயக்க, தெனகம சிறிவர்த்தன, கபிலகுமார காலிங்க, காமினி நிஸாந்த கருணாரத்ன ஆகியோர் நால்வரும் சிங்கள மொழியில் எழுதிய கதைகளையும் மலரன்பனால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட 14 சிறுகதைகளையும் ‘கொலுஷூ’ பிறமொழிச் சிறுகதைகள் என்ற பெயரில் கலைஒளி முத்தையா பிள்ளை நினைவு குழு வெளியிட்டுள்ளது.

விழாவிற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகண திஸாநாயக்காவிடம் கலைஒளி முத்தையா பிள்ளை நினைவு குழு செயலாளர் கலை இலக்கிய ஆன்மீக செயற்பாட்டாளர் எச்.எச்.விக்ரமசிங்க நூலை கையளிப்பதையும், மாத்தளை மாவட்ட மேலதிக செயலாளர்களான நிஸாந்த கருணாதிலக்க, ரிஸ்மினா ரியால்தின் இருவருக்கும் நூலை வழங்குவதையும் மற்றும் சாலிய குணவர்த்தன, காமினி நிஸாந்த கருணாரத்ன, தெனகம சிறிவர்த்தன, கபிலகுமார காலிங்க ஆகியோருக்கு பிரதிகளை வழங்கினர்.










## மூன்று நூல்களின் வெளியீட்டு விழா







பாண்டிருப்பு அறிஞர் அண்ணா மன்றம் நடத்தும் முப்பெரு நூல் வெளியீட்டு விழா கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் சனிக்கிழமை (04) நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கிழக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ச.நவநீதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு சரவணமுத்து கணேசமூர்த்தி கவிஞர் சரவணன் எழுதிய “உயிர்ப்பின் முகவரி” சிறுகதை தொகுப்பு நூல், திருமதி தனலட்சுமி முரசொலிமாறன் எழுதிய “அரசியல் சமூகவியல் அறிமுகமும்” ஆய்வு கட்டுரை தொகுப்பு நூல், சரவணமுத்து நரேந்திரன் விவேகவெளி தமிழேந்திரன் எழுதிய “தாயுன் தமிழும்”, கவிதை தொகுப்பு நூல் ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன.

இதற்கு ஜேர்மன் தமிழருவி வானொலி, சென்னை தமிழியல் ஆய்வுமையம், கவிஞர் முனைவர் கோ. மோகனரங்கன் அனுசரணை வழங்கினர். இலக்கிய அதிதியான பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

- வி.ரி.சகாதேவராஜா

# முதலாவது தசாப்தம் காணும் ஸ்ரீகுமரன் பாடசாலை

மாத்தளை கல்வி வலயத்தின் இறத்தோட்டை கோட்டத்தின் பாடசாலையான ஸ்ரீகுமரன் பாடசாலை உருவாக்கப்பட்டு இற்றோடு பத்து ஆண்டுகள் ஆகின்றன.
இறத்தோட்டை மாஃஇந்துக்கல்லூரி ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தில் உள்வாங்கப்பட்டது முதல் அதன் ஆரம்பப்பிரிவு மாஃ ஸ்ரீகுமரன் ஆரம்ப பாடசாலையாக உருவாக்கப்பட்டுள்ளது.





























நியூயோர்க்

# தெருக்களில் ஓடிய பச்சை திரவம்

நியூயோர்க் நகர தெருக்களில் பச்சை நிறத்தில் ஓடிய தண்ணீர் குறித்த புகைப்படங்கள் எக்ஸ் தளத்தில் வெளியாகியுள்ளது. அதில், பச்சை நிறத்தில் தண்ணீர் ஓடுகிறது.

சாக்கடைகள் மற்றும் கழிவுநீர் குழாய்களில் ஏற்பட்ட கசிவு காரணமாக இதுபோன்று பச்சை நிறத்தில் தண்ணீர் தெருவில் ஓடி இருக்கலாம் என கூறப்படுகிறது. எனினும், இந்த புகைப்படங்கள் வைரலான நிலையில், இணையத்தில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.



இந்த காட்சிகளை பார்த்த இணைய பயனர்கள் பலரும், இது வெப்பமயமாக்கல் காரணமாக நிகழ்ந்திருக்கலாமா என கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், சில பயனர்கள், இவ்வாறு திரவம் தெருக்களில் ஓடுவது நிலத்தடி நீர்



பிரச்சினையை ஏற்படுத்தலாம் என்பது போன்று பல்வேறு கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

இஸ்ரேல்

# "பணயக்கைதிகளை விடுவிக்கும் வரை எரிபொருள் இல்லை"




ஹமாஸ் - இஸ்ரேல் போர் நாளுக்கு நாள் உக்கிரமடைந்துவரும் நிலையில், ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழு ஆதரவு அளித்துள்ளது. அதேசமயம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், "ஹமாஸை அழிப்பது அவசியம். ஆனால், அதற்காக ஹமாஸ் பிடியில் உள்ள காசாவை முழு வீச்சில் இஸ்ரேல் ஆக்கிரமிக்க நினைப்பது தவறு. மனிதாபிமான போர் நிறுத்தம் தேவை" என்று கூறிவருகிறார்.

இந் நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்கும் வரை காசாவிற்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது, ஹமாஸுடனான போரையும் நிறுத்த முடியாது" என உறுதிபட தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து

# நெற்றியில் பச்சைக்குத்திய பெண்

காதலர்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள அன்பை பல்வேறு விதத்தில் வெளிப்படுத்தி வருவதுண்டு. சிலர் மக்கள் கூடியிருக்கும் பொது இடங்களில் அன்பை வெளிப்படுத்துவார்கள். தற்போதைய நவீன காலத்தில் குறுஞ்செய்திகள் உள்ளிட்டவைகள் மூலமும் கவரும் வகையில் அன்பை




வெளிப்படுத்துவார்கள்.


ஆனால், இங்கிலாந்தை சேர்ந்த பெண் ஒருவர், தனது காதலனின் பெயரை நெற்றியில் பச்சைக்குத்தியுள்ளார். இது தொடர்பான வீடியோவை அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். மேலும், அந்த வீடியோவிற்கு கீழ் "எனது முகத்தில் காதலனின் பெயரை பெற்றுள்ளேன்" எனப் பதிவிட்டுள்ளார்.

புதுடெல்லி

# "உள்ளூர் தயாரிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்"

தீபாவளி பண்டிகையை கொண்டாட தயாராகிக்கொண்டிருக்கும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தனது 'எக்ஸ்' பக்கத்தில் ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளார்.


அதில், "இந்த பண்டிகையின்போது மக்கள் உள்ளூர் தயாரிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து, சுயசார்பு பாரதம் என்ற நமது கனவை நிறைவேற்றுவோம். வாங்கும் பொருட்களுக்கான தொகையை



செலுத்த யு.பி.ஐ. டிஜிட்டல் பணம் செலுத்தும் முறையையும் மக்கள் பயன்படுத்த வேண்டும் என்றார்.

மேலும், உள்ளூர் தயாரிப்புகள் அல்லது கைவினைஞர்களுடன், இந்தியாவில் தயாரித்த ஸ்மார்ட்போனில் எடுத்த 'செல்பி'யை 'நமோ ஆப்'பில் மக்கள் பகிர்ந்துகொள்ளலாம். அந்த படங்களில் சிலவற்றை நான் சமூக ஊடகத்தில் பகிர்ந்துகொள்வேன். அது, 'வோக்கல் பார் லோக்கல்' என்ற உள்ளூர் தயாரிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் இயக்கத்துக்கு ஊக்கம் கொடுக்கும்" என தெரிவித்துள்ளார்.

# எக்ஸ் கதிர்களை படமெடுத்து அனுப்பிய ஆதித்யா எல் I




ஆந்திர பிரதேச மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி.சி. 57 ரொக்கெட் மூலம் ஆதித்தயா எல்-1 விண்கலம் செப்டெம்பர் 2ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இந்நிலையில், சூரியனை ஆய்வு செய்ய லாக்ராஞ்சியன் புள்ளி-1ஐ நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் ஆதித்யா-எல்1 விண்கலம் சூரிய அனலில் இருந்து வெளியாகும் எக்ஸ் கதிர்களை முதல்முறையாக படமெடுத்து அனுப்பியுள்ளது. கடந்த 29ஆம் திகதி பதிவான படத்தை கிராப் வடிவில் இஸ்ரோ புதன்கிழமை (08) வெளியிட்டுள்ளது. மேலும் ஆதித்யா-எல்1 விண்கலம் அனுப்பிய தரவுகள் சூரிய ஆற்றல் மற்றும் எலக்ட்ரான் குறித்த ஆய்வு செய்ய உதவும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.




புதுடெல்லியின் காற்று மாசு 400 முதல் 470 புள்ளிகளாக இருந்து வருகிறது. தலைநகரில் காற்று மாசு 399 ஏ.கியூ.ஐ. ஆக செவ்வாய்க்கிழமை (07) இருந்தது. இந்த காற்றை சுவாசிக்கும் நபர் 30 சிகரெட்டுகளை புகைப்பதற்கு சமம் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனிடையே புதுடெல்லி காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தக் கோரி மூத்த சட்டத்தரணி அப்ரஜிதா சிங் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது அவர் கூறுகையில், "புது டெல்லியில் காற்று மாசு அபாயகர அளவை எட்டியுள்ளது. பஞ்சாப் உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் வைக்கோல்களை எரிப்பதால் தலைநகரில் காற்று மாசு அதிகரித்து வருகிறது. அந்த மாநிலங்களில் வைக்கோல்களை எரிப்பதற்கு தடை விதிக்க வேண்டும்" என்றார்.

பஞ்சாப் அரசு தலைமை சட்டத்தரணி கூறும்போது, "ஏழை விவசாயிகள் வைக் கோல்களை எரித்து வருகின்றனர். மத்திய அரசு விவசாயிகளுக்கு மானிய உதவிகளை வழங்கி மாற்று வழியில் வைக்கோல்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு நீதிபதிகள் "காற்று மாசு காரணமாக புதுடெல்லி மக்களின் உடல்நிலை பாதிக்கப்படுகிறது.




உலகக் கிண்ணம்:

# மக்ஸ்வெல் தாண்டவத்தால் அரையிறுதியில் அவுஸ்திரேலியா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கிளென் மக்ஸ்வெல்லின் தாண்டவத்தால் அவுஸ்திரேலியா தகுதி பெற்றுள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே அரையிறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், இப்ராஹிம் ஸட்ரானின் ஆட்டமிழக்காத 129 (143), ரஷீட் கானின் ஆட்டமிழக்காத 35 (18) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜொஷ் ஹேசில்வூட் 2, கிளென் மக்ஸ்வெல், அடம் ஸாம்பா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 292 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, நவீன்-உல்-ஹக், அஸ்மதுல்லாஹ் ஒமர்ஸாய், ரஷீட் கானிடம் தலா 2 விக்கெட்டுகளை இழந்து ஒரு கட்டத்தில் 7 விக்கெட்டுகளை இழந்து 91 ஓட்டங்களுடன் காணப்பட்டபோதும் நடமாட முடியாத நிலையிலும் மக்ஸ்வெல்லின் ஆட்டமிழக்காத 201 (128) ஓட்டங்கள் காரணமாக அதே 7 விக்கெட்டுகளுடன் 46.5 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார்.



# உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறிய ஷகிப்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், பங்களாதேஷின் அவுஸ்திரேலியாவுடனான இறுதிப் போட்டியில் இடது கை சுட்டு விரல் முறிந்தமை காரணமாக அவ்வணியின் தலைவர் ஷகிப் அல் ஹஸன் பங்கேற்க முடியாமல் போயுள்ளது.

இந்நிலையில், ஷகிப்பின் பிரதியீடாக துடுப்பாட்டவீரர் அனாமுல் ஹக் பங்களாதேஷ் குழாமில் இணைந்து கொள்கிறார்.

இலங்கையுடனான போட்டியின்போதே ஷகிப் காயமடைந்திருந்தார்.

# நெஸ்டமோல்ட் அகில பாடசாலை மரதனோட்டம்




கல்வி அமைச்சுடன் நெஸ்டமோல்ட் இணைந்து நடத்தும் அகில இலங்கை பாடசாலை மரதனோட்டப் போட்டி நாளை மறுதினம் காலியில் நடைபெறவுள்ளது.

அனைத்து ஒன்பது மாகாணங்களிலிருந்தும் 300க்கும் மேற்பட்ட வீரர்கள், 21 கிலோ மீற்றர் தூரம் கொண்ட அரை மரதனோட்டப் போட்டியிலும், 900 பங்கேற்பாளர்களுடன் ஐந்து கிலோ மீற்றர் தூரம் கொண்ட காட்சி மரதனோட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

## தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில்

# சம்பியனானது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

■ அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பளுதூக்கும் சம்மேளனத்தால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட நொவிசஸ் பளுதூக்கும் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சம்பியனாகியுள்ளது.



# கரப்பந்தாட்ட போட்டியில் 'ஏபர்நெட் லங்கா' சாம்பியன்

■ ஆ.ரமேஸ்

அகில இலங்கை வர்த்தக நிறுவனங்களுக்கிடையில் தேசிய மட்ட ரீதியில் கொழும்பு-மஹரகம தேசிய கரப்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்று போட்டியில் உடப்புஸ்ஸலாவை 'ஏபர்நெட் லங்கா நிறுவனம்' முதலிடம் பெற்றுள்ளது.

இந்த வெற்றியினை கொண்டாடும் வகையில் நுவரெலியா மாவட்டத்தில் தலைசிறந்த கரப்பந்தாட்ட அணிகளான கந்தப்பளை பார்க் நைட்ரைடர் மற்றும் யங்ஸ்டார் ஆகிய கரப்பந்தாட்ட அணி வீரர்கள் உட்பட தோட்ட பொதுமக்கள் இணைந்து விசேட நிகழ்வு ஒன்றை நடத்தினர்.

கந்தப்பளை பார்க் தோட்ட முத்துமாரியம்மன் ஆலய திடலில் புதன்கிழமை (08)







காலை இடம்பெற்ற இந்த விசேட நிகழ்வில் "ஏபர்நெட்" லங்கா தொழிற்சாலை முகாமையாளர் என்.எச்.சுதத், கந்தப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கோகில ஆரியதாச, நுவரெலியா பிரதேச சபை, முன்னாள் தலைவர் வேலு யோகராஜ், தேசிய கரப்பந்தாட்ட சிரேஷ்ட வீரர் எல்.சி.ஏக்கநாயக்கா, நுவரெலியா மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கான சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் குலசிரி சமரசிங்க, உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 09 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.